திருவள்ளுவர் ஆண்டு 2037

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 101 பகுதி : 9 செப் - 07

மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 ★ THE MADURAI TAMIL SANGAM ★

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு. நா.குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்., | செயலாளர் |
| திரு. இரா குருசாமி பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் M.S., M.Ch., M.N.M.S.(Uro) F.I.C.S., | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| திரு. மா.ச.கார்த்திகேய பாலாஜி பி.இ., | உறுப்பினர் |
| திரு. எஸ்.எம். நாகராசன் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. பி. வீரணன் | உறுப்பினர் |
| [redacted] | |

## கல்லூரிக் குழு

| | |
|---|---|
| திரு. டாக்டர்.ந. சேதுராமன் M.S., M.Ch., M.N.M.S.(Uro) F.I.C.S., | தலைவர் |
| திரு. இரா.குருசாமி பி.ஏ., | செயலாளர் |
| திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்., | உறுப்பினர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி பி.இ., | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திருமதி. வாசுகி ராஜா எம்.எஸ்.சி., எம்.ஃபில்., | உறுப்பினர் |
| இராஜா. திரு. டி.என்.எஸ். முருகதாஸ் தீர்த்தபதி | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| [redacted] | |
| டாக்டர். திரு. க. சின்னப்பா பிஎச்.டி., முதல்வர் | உறுப்பினர் |
| டாக்டர். திருமதி. வீ. காந்திமதி பிஎச்.டி., இணைப்பேராசிரியை | உறுப்பினர் |
| டாக்டர். திருமதி. செ. தனலெட்சுமி பிஎச்.டி., இணைப்பேராசிரியை, பல்கலைக்கழக உறுப்பினர் | உறுப்பினர் |
| டாக்டர். திரு. இரா. மோகன் எம்.ஏ., பிஎச்.டி., | உறுப்பினர் |

# செந்தமிழ்

(தோற்றம் 1902)

தொகுதி : 101
பகுதி : 9
செப் 2007

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2037



வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

மதுரைத் தமிழ்ச்சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 6 | |

ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர் – மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–625 001.

பதிப்பாசிரியர் இரா. சதாசிவம் எம்.ஏ., எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–625 001.

# பொருளடக்கம்

அரசியலார் சிந்தனைக்கு 332

இனிமை எது? கவிவேந்தர் கா. வேழவேந்தன் 335

சித்தமருத்துவச் சுவடிப்பதிப்பு முறைமை மரு.சே.பிரேமா 336

திருவள்ளுவரும் பக்தி நெறியும் 342

பேராசிரியர் இரா. சதாசிவம்

பாற்கர சேதுபதி நான்மணிமாலை 348

ஆசிரியர் : சிவசம்புப்புலவர்

விளக்கவுரை ஆசிரியர் : பேராசிரியர் இரா. சதாசிவம்

மனிதநேயம் 354

கா. மனோகரன்

புதினம் புனைந்த புத்தொளிச் சித்தர் - கல்கி 361

முனைவர் ஆ.கி. பாலசுந்தரன்

# அரசியலார் சிந்தனைக்கு

தமிழ்மொழியைச் செந்தமிழ் என முதன்முதலாக முழங்கிய இடம் மதுரைத் தமிழ்ச் சங்கம். சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் "செந்தமிழ்" எனத் திங்கள் இதழைத் தொடங்கித் தமிழில் உள்ள செவ்வியல் இலக்கியங்களில் தமிழறிஞர்கள் ஆய்வு தொடங்கவும் சிந்திக்கவும் களம் அமைத்தது மதுரைத் தமிழ்ச் சங்கமாகும்.

புலவர்கள் தமிழகத்தில் சிற்றிலக்கியங்கள் பாடி அரசர்களை மகிழ்வித்துச் சிறு பொருள்பெற்று அரைத்தமாவை அரைத்தது போலச் சீட்டுக்கவி எழுதி காலங்கழித்து வந்தனர். அவர்கள் சங்கத்தில் கூடித் தமிழாய்வு செய்ய வித்திட்டது மதுரைத் தமிழ்ச் சங்கம்.

பாண்டித்துரையும் பாற்கர சேதுபதியும் தம்முடைய அரசவைப் புலவர் இரா. இராகவையங்கார் அவர்களை மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் ஆய்வுப் பணியை மேற்கொள்ளப் பணித்ததோடு செந்தமிழ் இதழைத் தொடங்கி தமிழ் செவ்வியல் மொழியென்பதை உலகறியச் செய்தார்கள். பாண்டித்துரையார் தானே பெரும்புலவரும் உரையாசிரியருமாக விளங்கியதால் தமிழகமெங்கும் வாழ்ந்த தமிழறிஞர்களை இனங்கண்டு அவர்தம் தமிழ்ப் புலமை உலகிற்குப் பயன்பட வேண்டும் என்னும் பெருவேட்கையால் புலவர்களுக்கு உதவியும் அவர்களுடைய நூல்கள் அச்சுவடிவம் பெறவும் தம் பொருள் அனைத்தையும் செலவு செய்தார். பாண்டித்துரைத்தேவர் மதுரையில் தாம் குடியிருந்த இல்லத்தைத் தமிழ்ச் சங்கமாக்கி தாம் வாடகை வீட்டில் குடியிருந்து துச்சில் இருந்த தமிழுக்குப் புக்கில் அமைத்தார்.

மதுரைத் தமிழ்ச் சங்கம் செவ்வியல் மொழியின் நாற்றங்கால் ஆகும். கடந்த நூறு ஆண்டுகளாகத் தமிழறிஞர்கள் "செந்தமிழ்" இதழில் எழுதிய கட்டுரைகள் காலத்தின் தாக்குதலுக்கு ஆட்பட்டு சிதைவுறும் நிலையில்உள்ளன. அக்கட்டுரைகளை மறுபடியும் அச்சுக்குக் கொண்டுவர வேண்டியது இன்றியமையாத பெரும் பணியாகும். அதில் வெளி வந்துள்ள கட்டுரைகள் இன்றும் கற்பவர்களுக்கு உயிர்ப்பூட்டும் கருத்தாழமும் செவ்வியல் நடைநயமும் உடையனவாகும்.

தமிழ்ச் சங்கத்தில் ஆராய்ச்சிப் பணி நடைபெற்று வருவதையும் செந்தமிழ் இதழ் தமிழறிஞர்களிடையில் பெரும் புகழ்பெற்று விளங்குவதையும் தமிழாசிரியர்கள் செந்தமிழ் வழிக் கல்வி நலம்பெற்று வருவதையும் அறிந்த அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சேதுபதி அரசரை வேண்டித் தமிழ்ச் சங்கப் புலவர் இரா. இராகவையங்கார் அவர்களை அழைத்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆய்வுத் துறையைத் தொடங்கியது.

அதுபோலவே சென்னைப் பல்கலைக் கழகம் செந்தமிழ் ஆசிரியரும் தமிழ்ச்சங்க ஆய்வு அறிஞருமாகிய மு. இராகவையங்கார் அவர்களை ஆய்வுப் பணிக்கு அழைத்துக் கொண்டது. பல்கலைக் கழகங்கள் ஆய்வுத் துறையைத் தொடங்குவதற்கு முன்னோடியாக இருந்து தமிழ் வளர்ச்சியில் தடம் பதித்துச் செந்தமிழ் இதழைத் தொடர்ந்து வெளியிட்டு வருவது ஈண்டு நினைவு கொள்ளத்தக்கது.

செந்தமிழ் இதழின் அருமை பெருமையை உணர்ந்த தமிழ்ச் சங்கம் தமிழகத்தில் உள்ள அறிஞர்களை அழைத்து 7.04.2007 அன்று மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் ஒரு கலந்தாய்வு நிகழ்த்தியது. அவ்வாய்வரங்கில் செயலர்கள் இரா. அழகுமலை இரா. குருசாமி இருவரும் முன்னிலை வகித்தனர். தமிழறிஞர்கள் செந்தமிழ் ஆசிரியர் இரா. சதாசிவம், புலவர். இரா. இளங்குமரன், பேராசிரியர் அ.அ. மணவாளன், பேராசிரியர் கதிர்மகாதேவன், பேராசிரியர் கு. வே. பாலசுப்பிரமணியன், பேராசிரியர் நா. பாலுசாமி, பேராசிரியர் இராமசுந்தரம், பேராசிரியர் அருணகிரி, பேராசிரியர் வேலாயுதன் உள்ளிட்ட ஆய்வு அறிஞர்கள் கலந்து கொண்டனர். முடிவாகத் தமிழ்ச் சங்கம் உடனடியாகச் செந்தமிழ் இதழில் வெளிவந்துள்ள கட்டுரைகளை மறுபதிப்புச் செய்ய வேண்டும் எனவும் தமிழ்ச் சங்கத்தின் நூற்றாண்டு விழாவை தமிழகம் தழுவிய அளவில் பெருவிழாவாக அரசின் பங்கேற்புடன் நடத்த வேண்டும் எனவும் தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி தமிழக நிதி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் இருவரும் தமிழ்ச் சங்கத்தின் அருமை பெருமைகளை அறிந்த பெருமக்கள் ஆதலின் அவர்களை அழைத்து நூற்றாண்டுவிழாவைச் சிறப்புற நடத்த வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

மதுரைத் தமிழ் சங்கம் இன்று ஏற்றுள்ள பெரும் பணிகள் தமிழ் மொழி வளர்ச்சிதொடர்பான இன்றியமையாத பணிகளாகும். நூற்றாண்டு விழாவையொட்டி விழாமலர் ஒன்று ஆயிரம் பக்க அளவில் செவ்வியல் இலக்கியம் சார்ந்த தமிழறிஞர்களின் கட்டுரைகளை வெளியிடவுள்ளது. செந்தமிழில் வெளிவந்துள்ள,

*இரா. இராகவையங்கார்,*
*மு. இராகவையங்கார்,*
*ச. வையாபுரிப்பிள்ளை*
*பெ.நா. அப்புசாமி*
*ஔவை சு. துரைசாமிப் பிள்ளை*

ஆகியோரின் கட்டுரைகளையும் ஈழநாட்டுப் பெரும்புலவர் சிவசம்புப் புலவர் பாடிய பாண்டித்துரைத் தேவர், பாற்கர சேதுபதி ஆகியோரின் நான்மணிமாலை உரை விளக்கத்துடன் 10 தொகுதிகளாக வெளியிடத் தயாரிப்புப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

தமிழ்ச் சங்கப் பணியின் இன்றியமையாமை கருதியும் செந்தமிழ் இதழ் ஆற்றியுள்ள அரும் தொண்டு கருதியும் தமிழ் மக்கள் நூற்றாண்டு விழாவை சிறப்புற நடத்தித் தமிழ்ச் சங்கத்தையும் செந்தமிழ் இதழையும் மேலும் பயனுறச் செய்ய வேண்டும்.

இப்பணியின் அருமை கருதி முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களும் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும் கண்ணின் சொல்லி செவியின் நோக்கும் இறைமாண்புடைப் பேரறிவாளர்களாதலின் உரிய முறையில் தமிழ்ச் சங்கத்தின் தமிழ் முயற்சி வெற்றிபெறவும் செவ்வியலிலக்கியங்களைத் தமிழ் மக்கள் இல்லந்தோறும் படிக்கவும் பேசவும் தமிழ் மறுமலர்ச்சி தோன்றிட தமிழ்ச் சங்க நூற்றாண்டுவிழாவில் தலைமை உரையாற்றவும் பேராசிரியர் செந்தமிழ்த் தொகுதிகளையும் நூற்றாண்டுவிழா மலரையும் வெளியிட்டு தமிழ் வரலாற்று நிகழ்வைத் தொடங்கி வைக்கவும் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

# இனிமை எது?

கவிவேந்தர். கா. வேழவேந்தன்

நாவிற்கே இனிமை எது? கரும்பு! உள்ள
நாசிக்கே இனிமை எது? முல்லை! தீட்டும்
பாவிற்கே இனிமை எது? உணர்ச்சி! நல்ல
பண்பிற்கே இனிமை எது? அடக்கம்! காணும்
வாவிக்கே இனிமை எது? அல்லி! நீண்ட
வானுக்கே இனிமை எது? நிலவு! பூத்த
பூவிற்கே இனிமை எது? வாசம்! நம்தாய்ப்
பூந்தமிழ்க்கே இனிமை எது? 'இனிமை' தானே! (1)

இல்லறத்தின் இனிமை எது? மழலை! செந்தேன்
இசைப்பாட்டின் இனிமை எது? மயக்கம்! சொக்கும்
நல்லுரையின் இனிமை எது? ஈர்ப்பு! தூய
நட்புறவின் இனிமை எது? உதவி! வண்மை!
நெல்வயலின் இனிமை எது? விளைச்சல்! வாழ்ந்த
நெறிவாழ்வின் இனிமை எது? மாட்சி! கற்கும்
நல்லறநூல் இனிமை எது? ஒழுக்கம்! அந்த
நன்னூலுள் இனிமை எது? 'குறள்நூல்' தானே (2)

# சித்தமருத்துவச் சுவடிப்பதிப்பு முறைமை

*பேராசிரியர் மரு. முனைவர். சே. பிரேமா,*
*சித்தமருத்துவத்துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம்,*
*தஞ்சாவூர்.*

சித்த மருத்துவம் குரு, சீடர் வழிமுறையில் கற்பிக்கப்பட்டது. பாடல் வடிவில் அமைக்கப் பெற்றதால் மனனம் செய்வது எளிதானது. மருந்துச் சரக்குகளையும் நோயாளிகளையும் மருந்து செய்முறைகளையும் இளவயதிலிருந்தே குருவுடன் இருந்து கற்றுக் கொண்டதால் அனுபவத் தமிழ் மருத்துவ நூல்களும் அனுபவ மருந்துகளும் எளிதாகக் கையாளப்பட்டு தன்னை அணுகிய சீடர்களுக்கும் கற்பிக்கப்பட்டது. குரு இறந்து விட்டாலோ அல்லது குருவைச் சேர்ந்து மருத்துவம் அறிந்து கொள்ள முடியாதவர்களுக்கு இது எட்டாக் கனியாக இருந்தது. இதனை நிவர்த்திக்கும் பொருட்டு ஓலைச்சுவடிகளில் அவை எழுதி வைக்கப்பட்டன. எவ்வளவு பாதுகாப்பாக வைத்திருந்தாலும் 300 ஆண்டுகள் மட்டுமே ஓலைச் சுவடிகள் அழியாமல் இருக்கும். அதனால் அதனைப் பிரதி செய்து கொள்ள வேண்டும். ஆசிரியர் சொல்ல சீடர்கள் எழுதும்போது கவனச் சிதறல் காரணமாக வார்த்தைகள் மாறுபட்டு எழுதிவிடக் கூடும். இதனால் பாடபேதங்கள் ஏற்படும்.

தமிழ்மருத்துவச் சுவடிகளைப் பொருத்தவரை இருவகைகளில் அமையும்.

1. பனை ஓலைச்சுவடி, 2. தாள்சுவடி

இவற்றை நூலாகப் பதிப்பிப்பதை 3 நிலைகளில் அறியலாம். அவை

1. நேற்றைய பதிப்பு நிலை

2. இன்றைய பதிப்பு முறை

3. நாளைய பதிப்பு வகை

## நேற்றைய பதிப்பு நிலை

1. தங்களிடம் உள்ள சுவடிகளையோ, பிறரிடம் வாங்கப்பட்ட சுவடிகளோ பதிப்பிக்கப்பட்டது.
2. சுவடியில் உள்ள மூலத்தை அப்படியே பதிப்பித்தல்
3. அரிய சொற்களுக்கு மட்டும் குறிப்பெழுதுதல்
4. உரையுடன் பதிப்பித்தல்
5. ஒப்பு நோக்கி பாட பேதங்களுடன் வெளியிடல்
6. தமது அனுபவக் குறிப்புகளை அங்கங்கே பதிவு செய்தல்
7. அறிவுத் திறனை வெளிக்காட்டும் வகையில் விருத்தி உரையுடன் வெளியிடல், இதற்கு பன்மொழிப் புலமையும் தமிழில் நுண்ணறிவும் பெற்றிருக்க வேண்டும்.
8. சொல்லடைவு, பொருளடைவு, விளக்கப்படங்கள் இவற்றுடன் வெளியிடுதல்

கடந்த காலத்தில் வெளியான நூற்கள் மருத்துவர்கள் அன்றி அவரிடமிருந்து பெறப்பட்டு பதிப்பாசிரியர் பெயருடன் வெளிவந்துள்ளன. இவற்றில் சுவடி பற்றிய விவரங்கள் குறிக்கப்படுவதில்லை. விற்றுத் தீர்க்கப்பட்ட நூறகளும் பழமையடைந்து விட்டது எனக் கருதப்பட்ட நூற்களும் மறுபதிப்பு செய்யப்பட்டன. பல மருத்துவச் சுவடிகள் அச்சியற்றப்பட்டன. புலமை மிக்க மருத்துவர்கள் இதனால் பலனடைந்தனர்.

## இன்றைய பதிப்பு முறை

இன்றைய நிலையில் மருத்துவச் சுவடிப் பதிப்புகளுக்கு சுவடி நூலகங்களையே சார்ந்திருக்க வேண்டி உள்ளது. இன்று விரைந்து அச்சியற்றக் கூடிய அச்சு இயந்திரங்கள் வந்துவிட்டாலும் கூட

சுவடிகளைப் பதிப்பிக்க பல சிரமங்கள் உள்ளன. ஒவ்வொரு சுவடி நூலகங்களையும் அணுகி நாட்கணக்கில் காத்திருந்து சுவடிகளை ஒப்பு நோக்கி சுவடிகள் விவரம், பதிப்புமுறை, பதிப்புச்சிக்கல், முன்னுரை, அணிந்துரை, பொருளடக்கம், சொல்லடைவு, அருஞ்சொற்பொருள் போன்றவைகளுடன் அரிதின் முயன்றும் மிகச் சாதாரண நூலொன்றையே பதிப்பிக்க இயலுகிறது. நேற்றைய காலகட்டத்தில் மருத்துவர்கள் அனேகம்பேர் பதிப்பாசிரியர்களாகவும் உரையாசிரியர்களாகவும் இருந்துள்ளனர். ஆனால் இன்றைய நிலையில் தமிழறிந்த பலர் பதிப்பாசிரியர்களாகவும் உரையாசிரியர்களாகவும் உள்ளனர்.

## நாளைய பதிப்புமுறை

ஓலைச்சுவடிகள், தாள் சுவடிகள் இவை அனைத்தையும் நாம் இருக்கும் இடத்திலேயே பெற்றுக் கொள்ளமுடியும். சுவடிகளை ஒப்பு நோக்குவதில் சிரமங்கள் ஏற்படாது. அயல் நாடுகளில் சுவடிகள் இருந்தால் கூட அவற்றையும் ஒப்பு நோக்கவோ பதிப்பிக்கவோ இயலும். தாள்களைக் கொண்டு பெரிய பெரிய புத்தகங்களை பதிப்பித்து வைத்துக்கொண்டு அவற்றைப் பாதுகாத்து வைக்க இடமில்லாமலும் தேவையானதைத் தேடிப்பிடிக்க முடியாமல் அவஸ்தைப்பட வேண்டியதில்லை. உங்களுக்குத் தேவையான புத்தகங்களை ஒரு—ல் அடக்கி வைத்துக் கொள்ளமுடியும். பதிப்பு நூல்கள் e-book—களாகவே வெளிவரும். உலகத்தின் எந்த மூலையில் இருந்தாலும் நம்முடைய தமிழ் மருத்துவ நூலை அவரது மொழியில் மொழிமாற்றத்துடன் படிக்க இயலும். அடிப்படை ஆய்வுகளுக்கென்று காலத்தை நீட்டித்துக் கொண்டிராமல் அடுத்தகட்ட அரிய அறிவியல் ஆய்வுகள் மேற்கொள்ள இயலும். உலகெங்கும் சித்த மருத்துவம் பரவிப் புகழடையும் காலம் மிக அருகாமையில் உள்ளது. சுவடிப்பதிப்பு முறைமையைக் கூட தம் இல்லத்தில் இருந்துகொண்டு (On Line)—ல் படிக்கமுடியும்.

சித்த மருத்துவச் சுவடிபதிப்பிப்போர் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்கள்.

# சித்த மருத்துவ நூற்பதிப்பு முறைமை

## ஒரு பார்வை

**Phase - 1**

நூல் தேர்வு செய்தல்

பாடல்வடிவில் உள்ளவை

உரைநடையில் உள்ளவை

நூலின் தேவை

இதற்கு முன் வெளி வந்துள்ளவை

நூலின் அளவு

இதற்கு ஒப்பான சுவடிகள் அவற்றின் தன்மை

தரம்

காலத்தால் முந்தைய சுவடி அல்லது நூல் விவரம்.

**Phase - 2**

பதிப்பு முறையில் நம்முடைய பங்கு

பாடபேதங்கள் பதிவு செய்தல்

பாடல் பேதங்கள் பதிவு செய்தல்

உரை எழுதல்

மூலம் மட்டும் பதிப்பித்தல்

உரை நடையுடன் பதிப்பித்தல்

விளக்க உரையுடன் பதிப்பித்தல்

சித்த மருத்துவ நூல் பதிப்பிற்கு
தேவையான அடிப்படைக் கூறுகள்

நல்ல தமிழ் புலமை

இலக்கணப் புலமை

மருத்துவப் புலமை

அன்றைய அளவு முறைகள்

அன்றைய எழுத்து முறைகள்

அகராதி இலக்கணம்

எழுத்தாற்றல்

சொல்லாற்றல்

தொகுப்பு முறைமை

## பதிப்பிக்கும் நூலின் தன்மை

1. மக்கள் மருத்துவம்
2. விலங்கின மருத்துவம்
3. மூலிகை மருத்துவம்
4. அகராதியியல்
5. திரட்டு நூல்
6. நஞ்சு மருத்துவம்
7. நாடிக் கணிப்பு
8. குழந்தை மருத்துவம்
9. பெண்கள் மருத்துவம்
10. மாந்திரிக மருத்துவம்
11. வர்ம மருத்துவம்
12. அனுபவ வைத்தியம்
13. நாட்டுப்புற மருத்துவம்
14. நோய்கணிப்பு
15. சிறப்பு மருத்துவம்
16. அறுவை மருத்துவம்

## பதிப்பின் போது அறிய வேண்டியவை
## கட்டுரை அல்லது நூல்

பிழை திருத்தம்

பக்க அளவு

எழுத்தளவு

படங்களின் அளவு நிறம்

பாடபேதம் குறிக்க வேண்டிய முறை

பொருளடக்கம் அமைத்தல்

சொல்லடைவு, பொருளடைவு தயாரித்தல்

சுருக்க எழுத்துக்களின் விரிவு

முன்னுரை

பதிப்புச்சிக்கல்

அணிந்துரை

பதிப்பு விபரம்

முன் அட்டை, பின்னட்டை

நூல் விவரம்

ஆசிரியர் பெயர்(கள்)

# திருவள்ளுவரும் பக்தி நெறியும்

– பேராசிரியர் **இரா. சதாசிவம்**

திருவள்ளுவர் அறத்துப்பாலின் தோற்றுவாயாகக் கடவுள் வாழ்த்தை அமைப்பதன் நோக்கம், அதன் இன்றியமையாச் சிறப்பு நோக்கிய முதன்மை குறித்தேயாகும். 'உலக முதல்வன் இறைவன்; உலகம் அவன் திருவருள் வண்ணம்; அவன் திருவடியைத் தொழுக' என அறிவுறுத்துகிறார்.

திருக்குறள், கடவுள் வாழ்த்து, பக்தியை வலியுறுத்துகிறது. "பக்திச்செல்வம் பிற செல்வங்களை விடச் சாலச்சிறந்தது; இம்மை மறுமை இன்பங்களை அளிக்க வல்லது; அதனைப் போற்றுக" என்பது அவர் துணிவு; இது கடவுள் வாழ்த்துப் பகுதியை நுண்ணதின் கற்கப் புலப்படும்.

முதல் திருக்குறள் கடவுளின் முதன்மையைச் சுட்டி, அவன் ஒன்றாய், உடனாய், வேறாய் உயிர்களுள் விளங்குவதை அறிவுறுத்துகிறது.

இரண்டாம் திருக்குறளில் நன்மைதரும் பரம்பொருளின் அருளைத் தனதாக்கிக் கொள்ளாவிட்டால் கல்வியினால் ஒருபயனும் இல்லை என அறிவுறுத்துகின்றார். தொழுதல் ஈண்டுச் சடங்கும் ஆரவாரமும் சார்ந்த சமய ஆரவாரம் அன்று; ஆரவாரம் அற்ற அன்பு நிலை. அன்பான் நினைப்பவரது உள்ளக்கமலத்தில் இருப்பவன் இறைவன். அவனை இடைவிடாது நினைப்பது பக்தியின் இயல்பு. 'களித்துக் கலந்த காதல் கசிவொடு தொழுது போற்றி ஒழுகுவது பக்தி வாழ்வு. இதனை ஆசிரியர் திருவள்ளுவர், மாணடி சேர்ந்தார், அடி சேர்ந்தார், தாள் சேர்ந்தார் எனக் குறிப்பிடுவது அவரது பக்திச் சிறப்பை உணர்த்தும். மனம் எப்போதும் திருவருளைச் சிந்திப்பது அன்புடையவர் உள்ளத்தின் இயல்புமாகும். சாவுத் துன்பத்திலும் கூட உயிர் திருவருள் நினைப்பை ஒழியாது இருக்கும் எனப் பக்திநெறியை – அன்பினில் கும்பிடும் நெறியை–வலியுறுத்துகின்றனர். இதனைத் தேவாரம், "என் கண்பொருந்தும் போதத்தும் கைவிட நான் கடவேனோ" எனப் போற்றுகின்றது. எப்போதும் திருவருள் சிந்தனையை மனம் பற்றி நிற்பதையே ஆழ்மனத் தியானம், நிட்டை, சமாதி என யோக நெறியில் குறிப்பிடுவர். இதனைப் பரிமேலழகர் நன்கு உணர்ந்து, சேர்தல்–இடைவிடாது நினைத்தல் என விளக்குகிறார். ஒவ்வொரு குறளிலும் இதனைத் திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார்.

"வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை யில"

என்னும் குறளில் மனம் சலனமற்றுத் தியானத்தில் இன்புற வேண்டின் பொருளும் காமமும் ஆகா என மணக்குடவர் நுட்பமாகப் பொருள் உரைக்கின்றனர். உலகவாழ்க்கை துன்பமுடையது என்பதை உணர்வதற்கே வாழ்க்கை அனுபவமும் அறிவும் வேண்டும். பிறப்பு இறப்புத் துன்பம் உடையது என்பதை 'இடும்பை' என்னும் சொல்லால் குறிக்கிறார். பிறப்பாகிய துன்பம் நீங்க இறைவனுடைய திருவருளைச் சார்ந்த செம்பொருள் தியானம் வேண்டும். அத்தகைய அவா அற்ற ஒழுக்க நெறி நிற்கின்ற பக்குவமுடையவர்களே இடும்பையற்ற இன்பநிலைத் தியான அனுபவம் பெறமுடியும் என்பதே இத்திருக்குறளின் உள்கிடக்கையாகும். சேர்தல்—இடைவிடாது நினைத்தல்.

மனம் எப்போதும் திருவருள் சார்ந்த அனுபவத்தில் திளைத்தல் போலவே, வாயும் திருவருளைச் சொல்ல வேண்டும். கண் பார்த்துப் படிக்க வேண்டும். காது கேட்கவேண்டும். அதற்குபாயம்,

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

என அருளுகின்றார். இருள்தரு துன்பம் நீங்க மெய்ஞ்ஞான மென்னும் பொருள்தரு இறைவன் புகழை இடைவிடாது தோத்திரம் செய்ய, அவன் அருள் தந்து இன்பப் பேற்றை நல்குவான் என்பதாம். இக்குறளுக்கு உரைகண்ட பண்டை உரையாசிரியர்களில் பரிதியார், "மும்மலவித்து ஆகிய பாவமானது சிவகீர்த்தி பாராட்டுவானிடத்து இல்லை என்றவாறு" என உரைகண்டுள்ளார்.

மற்றொருவர், 'அஞ்ஞானம் பற்றி எழாநின்ற இருவினைகளும் மெய்த்தன்மை வாய்ந்த சிவபிரானது திருப்புகழைப் பாராட்டுவோரிடத்துச் சேரா' என எழுதுகின்றார். இவர்கள் வலியுறுத்துவது வினை நீக்கத்திற்கு மெய்த்தன்மை வாய்ந்த இறைவனது திருப்புகழைத் தோத்திரம் பண்ண வேண்டும் என்பதாகும். "தமிழோடு இசை பாடல் மறந்தறியேன் நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன் உன் நாமம் என்நாவில் மறந்தறியேன்" என்னும் பக்தி நெறியையே திருவள்ளுவர் இத்திருக்குறளில் வலியுறுத்தியிருப்பதை உய்த்தறியலாம்.

கடவுள் வாழ்த்தில் இதுவரை மனம், மொழிகளால் வழிபாடு செய்யும் நெறியை விளக்கிய திருவள்ளுவர், அதிகாரத்தின்

மையப்பொருளாக, அதிகாரத்தின் நடுவணதாக,

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்"

என்னும் குறளில் ஒழுக்கத்தை அறிவுறுத்துகின்றார்.

மனம் செம்மையுற்று, வாக்கும் பக்குவம் அடைந்து அமைவதோடு வாழ்க்கை ஒழுக்க நெறியில் அடங்கி நிற்றல் வேண்டும். அவரே இனிது வாழ்வார், உரையாசிரியர் இதனை,

"ஐந்து அவாவினையும் அறுத்தானது மெய்யான ஒழுக்கநெறியின் கண் வழுவாது நின்றார் பிறப்பின்றி எக்காலத்தும் ஒருதன்மையராய் வாழ்வார்" எனக் குறிப்பிடுகின்றார். "பொல்லாப்புலனைந்தும் போக்கினான் காண்" என்று அருளாளர் அருளிச் செய்வர்.

இக்குறள் முன்னை நான்கு குறளுக்கும் பின்வரும் நான்கு குறளுக்கும் நடுவணாக அமைந்து ஒழுக்கமே உயிரை ஈடேற்றுவது என்பதை வலியுறுத்துவான் அமைந்தது எனலாம்.

இவை நான்கு பாட்டானும் இறைவனை நினைத்தலும், வாழ்த்தலும், அவன் நெறி நிற்றலும் ஆகிய பக்தி நெறியை வலியுறுத்தியதாகும்.

எல்லாவுயிர்களும் துன்பநீக்கமும் இன்பநாட்டமும் உடையன. துன்ப நீக்கத்தை அடையும் நெறியைப் பின்வரும் குறள்களில் ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

"தனக்குவமை இல்லாதான்தாள் சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது"

இதன்கண் ஆசிரியர் துன்பநீக்கத்திற்கும் கவலை நீங்குதற்கும் உபாயம் அருளுகின்றார். இதனை விரித்துரைக்கின்ற மகாவித்துவான். தண்டபாணி தேசிகர், "மனக்கவலை உலகியல் வாழ்வுக்குத் தேவையான பொருள்கள் பற்றியும், பகை சினம் அழுக்காறு ஆகிய குணங்களைப் பற்றியும் விளையும் சிதைந்த எண்ண ஓட்டங்கள்—இவை விருப்பு வெறுப்புக்களால் விளைவன" என விளக்குகின்றார்.

கவலை மனச்சிதைவு என்பதும், எண்ணங்கள் சிதிலமடைந்து நோய் உண்டாகிறது என்பதும், அதற்குரிய காரணம் பொருள் பற்றியும் குணக்கேடு பற்றியும் என்பதும் அதற்குரிய தீர்வு அவற்றின் குற்றம்

*உணர்ந்து அதனின்றும் நீங்கித் திருவருளைச் சார்தலேயாகும் என்பதும்* அறிவுறுத்தப்படுகிறது. நிர்மலத் தன்மையுடைய பரம்பொருளைச் சிந்திப்பதே கவலை நீக்கத்திற்கு வழி என்பது துணியப்படுகிறது. இக்கவலை பொருள், காமம் பற்றிய விருப்பு வெறுப்புக்களால் எழுவதாகும் அதன்மீது இருக்கின்ற பற்றினை நீக்கிய வழி மனம் செம்பொருளைப் பற்றி இன்புறும்.

*பொருள், காமம் ஆகிய பசையாப்புகளிலிருந்து மனம் தெளிந்து* விடுபடுவதற்கு அறவுணர்வு வேண்டும். ஆசிரியர் திருவள்ளுவர் அறத்தை அறவாழி என உருவகம் செய்கிறார். அதனை உடையவன் இறைவன் என்கிறார்; அறவாழி அந்தணன் என இறைவனைக் காட்டுகின்றார்; இதனைச் சான்றோர், "தயாமூல தன்மம் என்னும் தத்துவம்" என்பர். இதனை அப்பர் சுவாமிகள்,

> *"தயாமூல தன்மமென்னும் தத்துவத்தின்*
> வழிநின்று தாழ்ந்தோர்க்கெல்லாம்
> நலம் கொடுக்கும் நம்பியை நள்ளாற்றானை நானடியேன்
> நினைக்கப் பெற்றுய்ந்த வாறே"

எனப் போற்றுவார்.

அறம் என்பது ஒரு கோட்பாடு; அதற்குமூலம் தயை—அன்பு; அன்பின் வழிநின்று அறத்தை வடிவமாக உடைய தலைவனைத் தாழ்ந்து பக்தி செய்வோர்க்குத் திருவருளாகிற நலம் கிடைக்கும் என்பது பொருளாகும். அவன் பிறப்பில் சிக்கிய உயிர்களின் பொருள், காமம் *ஆகிய அவா அறுத்துத் துன்ப நீக்கம் அருளுவான் என்பதாம்.*

இரண்டாம் குறளில் கல்வியின் பயன் இறைவன் நற்றாள் தொழுதல் என்றார்; ஒன்பதாம் குறளில் உடம்பு பெற்ற பயன் எண்குணத்தான் தாளை வணங்குதல் என்கிறார். திருக்குறள் உரையாசிரியர்களில் முன்தோன்றிய பெரியார், மணக்குடவர்; அவர் உரையில், "உயிர் உண்டாகில் வணங்கும் என்று இழித்து, உடம்புகள் என்றார்" என எழுதுகிறார்; உயிர் இவ்வுடம்பு எடுத்த *பயன் உடல் உறுப்புகளால்* இறைவனை வழிப்படுதல் என வலியுறுத்துகின்றார்.

பரிமேலழகர் தம் உரையில், "காணாத கண் முதலியன போல வணங்காத *தலைகள் பயனில எனத் தலைமேல் வைத்துக் கூறினார்.* கூறினாரேனும் இனம்பற்றி வாழ்த்தாத நாக்களும் அவ்வாறே பயனில என்பதூஉம் கொள்க" எனக் குறிப்பிடுகிறார்.

பக்திநூல் ஆசிரியராகிய அப்பர் சுவாமிகள் இதன் விளக்கமாகத் திருவங்க மாலையாகச் சாதாரிப்பண்ணில் ஒவ்வொரு அங்கமும் உயிரும் உடம்பும் ஒன்றி இறைவனை வழிபட வேண்டும் என அறிவுறுத்துகிறார்.

மேலே குறிப்பிட்ட மூன்றுபாட்டானும் அவனை நினைத்தலும், வாழ்த்தலும், வணங்கலும் ஆகிய பக்தி நெறி நில்லாவழிப்படும் குற்றம் கூறப்பட்டது என்பது தெளிவாகின்றது. திருவள்ளுவர் வழிபடுதல் வேண்டும் என்பதை உடன்பாட்டு முகத்தானும் மறுதலையாக வழிபடாமையின் குற்றத்தையும் குறிப்பிட்டு வழிபாட்டை வலியுறுத்துகின்றார் என்பது தெளிவாகிறது.

ஆசிரியர் திருவள்ளுவர், பசையாப்பாகிய பற்றுவிடற்கு பற்றின் நீங்கிய இறைவனைப் பற்றுக என்த் துறவற இயலில் வலியுறுத்தியதைக் கடவுள் வாழ்த்தின் இறுதியில், இறைவன் திருவடியாகிய தெப்பத்தைப் பற்றியோர் பிறவியாகிய கடலைக் கடப்பர் மற்றையோர் பிறப்பு இறப்பாகிய துன்பக்கடலில் அழுந்துவர் என முடிவு செய்கிறார்.

அறம், மறம் என்ற இரண்டு நிலைகளில் அறம் சார்ந்து அருள் வழிநின்று, தயா மூல தன்மம் என்னும் தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்து எளிமையும் பக்தியும் செறிந்து வழிபாடு செய்து திருவருட்பேற்றைத் துய்த்து உய்க என்பதாம்.

அதிகாரம் என்பது ஒரு பொருள் நுதலிவரும் பல பாடலின் தொகுதியாகும். கடவுள் வாழ்த்து என்னும் இவ்வதிகாரம் வாழ்த்துதல், வணங்குதல் என்னும் தலைப்பில் அன்பின் வழிநின்று இடைவிடாது மனம் மொழி மெய்களால் திருவருள் வழி நிற்க, அவன் திருவருளைப் போற்றி உய்க எனப் பக்திநெறியை வலியுறுத்தியதாகும்.

இக்கட்டுரை திருவள்ளுவரைச் சமயச்சார்புடையவராக வரைந்ததன்று திருவள்ளுவர் "செம்பொருள்" என்றும் "இறைவன் பொருள்சேர் புகழ்" என்றும் சொல்கிறார். அப்பர் சுவாமிகள் "சிவன் என்னும் செம்மேனி எம்மான்" என்றும் "தமிழோடு இசைபாடல்" என்றும் சொற்களை அமைத்துள்ளார். திருவள்ளுவர் பொதுமை அறம்பாடும் புலவர். அப்பர் தமிழ் எழுச்சிக்காக ஊர்கள் தோறும் சென்று தமிழிசை பாடியவர். இருவரும் சொற்களில் வேறுபட்டாலும் பொருளில் ஒருமை உடையவர்கள்.

# பாற்கர சேதுபதி
## நான்மணி மாலை (சென்ற இதழ் தொடர்ச்சி)

ஆசிரியர்
யாழ்நல்லூர் உடுப்பிட்டி சிவசம்புப் புலவர்,
உரைவிளக்கம் இரா. சதாசிவம்
செந்தமிழ் ஆசிரியர்.

**அகவல்**

*"கண்ணிமிர் பரிமளக் கமலக் கண்ணினா*
*லுண்ணிமிர் கருணையி னுலக மோம்பலாற்*
*பேணுறு பீர்நிறப் பீதாம் பரத்தான்*
*மாணுற மன்னிய மலர்மா வுரனாற்*
*பொங்குமின் னமுதம் புலவருக் குதவலாற்*
*சங்குசக் கரம்வா டடக்கையி லேந்தலா*
*லோங்கிய மழைமுகி லுறழ்தரு நிறத்தாற்*
*பாங்கியல் சேது பதியெனும் பான்மையான்*
*மலைவளர் காதலி மாதிடத் தானை*
*நிலைவள ரருச்சனை நிரப்புசெந் நெறியால்*
*வனத்தள வத்திரு மாலை புனைதலான்*
*மனத்தளி யிற்றிகழ் வான்கவிக் கருளலாற்*
*பாற்கர சாமிப் பார்த்திபன்*
*பாற்கட லமளிப் பகவனொப் பானே."* [12]

திருவுடை மன்னன் திருமாலே என்பார் ஆழ்வார். பாற்கர சாமி மன்னர் திருமாலின் தோற்றமே எனப் புலவர் போற்றுகின்றார். கண்ணுக்கு அழகுசேர்ப்பது அருள் பார்வையேயாகும். பாற்கரவேளின் கண்ணின் எடுப்பு தாமரை மலர்போல் குளிர்ச்சியும் சூழலைப் பார்வையால் இன்பூட்டும் பரிமாளப் பொலிவுடையது. அரசற்குச் சிறப்பு ஈகையும் கருணையுமே. பாற்கர வேள் உள்ளத்தின் கருணை அருள் மழையாக உலகைப் பாதுகாக்கிறது. கலைமகளும் நிலமகளும் அவனிடத்தில் விரும்பி உறைவதால் மலர்மகள் அவன் மார்பை அழகு செய்கிறாள் எனக் கவிபுனைந்துரைக்கும் நயம் பாராட்டத்தக்கது.

மழைபெய்து உலகை இன்புறுத்தலால் கார்முகில் அழகு பெறுகிறது; பாற்கர சேதுபதியும் கார்முகில் போல் புலவர்க்கு உதவலால் சங்குசக்கரம் ஏந்திய திருமால்போல் விளங்குகின்றான்.

திருமால் ஆயிரம் மலர்கொண்டு மாதொருபாகனை ஆயிரம் திருப்பெயர்களை உளம்கொள்ளச் சொல்லி ஆராதனை செய்யும் அன்பினன். பாற்கரவேளும் திருநீற்றுப் பொலிவும் உருத்ராக்கமும் அணிந்து சிவ நினைவோடு வாழும் மெய்யுணர்வாளன். பாற்கரசாமிப் பார்த்திபன் உள்ளக் கோயிலில் தமிழ்ப் புலவர்களைப் போற்றிப் பாராட்டும் பண்பினன். பாற்கடலில் பள்ளி கொள்ளும் திருமகள் கேள்வன் ஆழ்வார் கவிகளால் பாடல்பெறுவதுபோல பாற்கரசாமியும் புலவர்பாடும் இன்கவிமாலையணிந்து பாமணம் பரப்புகின்றான். திருமாலும் பாற்கரவேளும் விண்ணும் மண்ணும் போற்றத் திருவருள் ஆட்சி செய்கின்றனர் எனப் புலவர் பாற்கர வேளை திருமாலோடு ஒப்பிடுவது காண்டற்குரியதாகும். பாற்கரவேள் அரசாட்சி செய்த காலத்தில் செயற் கருஞ்செயல்களாலும், பண்பு நலங்களினாலும், மக்கள் நெஞ்சில் தெய்வ மாண்புடையவராக இடம்பெற்று விளங்கினார். சேதுநாட்டில் உள்ள கோயில்களையெல்லாம் எழில் உறமாற்றியமைத்தார். திருவிழாக்களை விளக்கமுறச் செய்தார். ஏழைஎளிய மக்களின் பசிப்பிணி முதலான துன்பங்களைப் போக்க அன்ன சத்திரங்களையும், மருத்துவசாலைகளையும் அமைத்தார். அருள்நலம் கனியும் உயர் குணங்கள் உடைமையாலும், திருவேடப் பொலிவாலும், கல்விகேள்வி சிறக்கச் செய்தலாலும், புராணங்களாகக் கருதப்பட்ட தமிழ்ச் சங்கத்தை வரலாற்றில் உண்மையாக்கியதாலும் பாற்கரவேள் திருமால் என நினைக்கப்படும் என்னும் பொருள் உரை ஏற்றமுடையதாகும்.

***வெண்பா***

*"ஒப்பிலாச் சைவமெங்கே யுண்மை யறங்களெங்கே*
*கைப்பிலாத் துய்யதமிழ்க் கல்வியெங்கே - தப்பிலாப்*
*பாவலரெங் கேசீமான் பாற்கரவே டேவைநகர்க்*
*காவலனா மேவியிடாக் கால்."* [13]

பத்தொன்பது இருபதாம் நூற்றாண்டில் அந்நியர் தமிழ்ச் செல்வி அறியாதார் இம்மண்ணை ஆண்டனர். அதனால் ஆங்கிலம் அரசியல் வாணிகம் முதலான பலதுறைகளில் ஆளுமை பெற்றது. சொந்தநாட்டில் தமிழ் மக்கள் அந்நிய மொழியின் மேல் மோகம் கொண்டனர். அந்த மயக்கத்தால் தாய்மொழியை மறந்து ஆங்கில மொழியை விரும்பிக் கற்கத் தொடங்கினர்.

தமிழ்க் கல்வி புறக்கணிக்கப்பட்டது. தமிழ் இலக்கண இலக்கியங்கள் கற்பாரும் கற்பிப்பாரும் இன்றி சிதைந்தொழியும் நிலை ஏற்பட்டது. தமிழ் ஓலைச் சுவடிகள் சிதிலம் அடைந்து கரையானுக்கு இரையாயின. பழந்தமிழ் இலக்கியங்களைப் போற்றுவார் இன்மையால் அவை பெரும்பான்மையாக மறைந்தொழிந்தன. தமிழறிவு மங்கி ஆங்கிலக் கல்வி மக்களிடையே மேலோங்கியது. தமிழைப் பேணிப் பாதுகாக்கப் புரவலர் இல்லை ஆங்கிலம் ஆங்கில அரசால் பெரும்பொருட் செலவு செய்து ஊர்கள் தோறும் பள்ளிகளும் கல்லூரிகளும் அமைத்துக் கற்பிக்கப்பட்டன. தமிழ் கற்பார் யாருமில்லை. கம்பனை ஒத்த மகாகவிமகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையாவார். அவரிடம் பாடம் கேட்டுத் தமிழ் கற்க யாரும் முன்வரவில்லை. உ.வே. சாமிநாதையர் ஒருவர்தான் இறுதிக் காலத்தில் அவருடன் இருந்து தமிழ் கற்றுவந்தார். இது தமிழ்நாட்டுக் கல்வி நிலை.

இத்தகைய சூழலில் சேதுபதி அரச குடும்பத்தினர் தமிழ் இலக்கிய இலக்கணங்களின் அருமைபெருமைகளை நன்கு அறிந்து போற்றி வந்தனர். தமிழ் இலக்கண இலக்கியங்கள், மருத்துவ நூல்கள், தமிழிசை ஆகியவை மறைந்துபோகாமல் தக்க வித்துவான்களைக் கொண்டு மறுபதிப்புக் கொண்டுவந்து அந்தநூல்களை தம் சொந்தச் செலவில் தமிழகத்தில் உள்ள கல்வியாளர்களுக்கு அனுப்பி அவர்கள் கற்கும்படியாக உதவினர். சேதுபதியின் அரண்மனைக் குறிப்பில் யார் யாருக்கு நூல்கள் அனுப்பப்பட்டன என்னும் அஞ்சல் அனுப்பிய குறிப்பு

இன்னும் உள்ளது. இத்தகைய தமிழ்ப் பாரம்பரியத்தில் வந்த பாற்கரவேளும் பாண்டித்துரையும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்தார்கள். பாற்கரசேதுபதி மதுரைத் தமிழ்ச் சங்கத்தொடக்க விழாவுக்குத் தம் பரிவாரங்களுடன் வந்ததுடன் பெரும் பொருளையும் சங்கத்திற்கு உதவுகிறார். மதுரைத் தமிழ்ச் சங்கம் முதன்முதலாக பாலபண்டிதம், பண்டிதம், வித்துவான் முதலான தமிழ் வகுப்புக்களை தக்க புலவர்களைக் கொண்டு தொடங்குகிறது. அங்கு படித்தவர்கள் தமிழகமெங்கும் பள்ளிகளில் தமிழ் ஆசிரியர்களாகப் பணி புரிகிறார்கள். சங்கத்தில் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு உணவு, உடை இருக்கை மேற் செலவுகளையும் ஏற்றுத் தமிழ்க் கல்வியை அளித்தது. இதுவே பிற்காலத்தில் பல்கலைக் கழகங்கள் தமிழ்ப் பாடம் தொடங்குவதற்கும் பின்பு தனித்து தமிழ்ப் பல்கலைக் கழகம் தோன்றுவதற்கும் மூலமுதலாயிற்று.

தமிழ் நிலைபெற்று வளர்வதற்குக் காரணமான சேதுபதி பாற்கரவேளேயாவார். அவருடைய அன்பிற்குரிய அண்ணனே பாண்டித்துரைத் தேவர் தமிழ் முயற்சிகளுக்கு நாற்றங்கால் அமைத்து வித்திட்டவர் நம் பாட்டுடைத் தலைவர்.

தமிழ் முயற்சியோடு பாற்கரவேள் சைவசமய வளர்ச்சியிலும் மிக்க ஈடுபாடு கொண்டவர். ஆங்கிலேயர் இந்திய மக்களுடைய மொழி சமூகம் சமயம் ஆகிய மரபுகளை அழித்துத் தாங்களுடைய மொழி சமயம் சமூக மரபுகளைப் பரப்புவதில் அதிதீவிரமாக இருந்தனர். அதன்பின் விளைவுகளை உணர்ந்த நம் தேயத்து அறிஞர்கள் கவலையுற்றனர். செய்வது அறியாது தவித்தனர். அக்காலத்தில் பெரும் கல்விமானாக விளங்கிய திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் சுவாமிகள் பாற்கரசேதுபதியிடம் தமிழ்க் கல்விநிலையம் தோற்றுவிக்க வேண்டுமென வற்புறுத்தியதாக அவர்காலத்து அறிஞர் பலரும் கூறுவர்.

சைவச் சான்றோர் பலருடனும் கல்வியாளர் பலருடனும் நெருங்கிய உறவும் நட்பும் பூண்டு தமிழையும் சைவத்தையும் போற்றித்

தமிழர் மரபு சிதையாமல் தக்க சமயத்தில் அரும்பணியாற்றியவர் பாற்கர சேதுபதியேயாவார்.

இவற்றை நன்கு உணர்ந்த நூலாசிரியர் சிவசம்புப் புலவர் இவ்வரிய வெண்பாவில் பாற்கரவேளின் புகழ்க்குரிய காரணங்களை சீர்உற எடுத்துரைக்கிறார். தமிழர் வாழ்வுநெறிச் சைவ நெறியேயாகும். உண்மையும் அறமும் பேணுதல் வாழ்வின் குறிக்கோள். இவற்றுக்கு அரண் செய்வது அரசியல் நெறி. தமிழர் மரபுகுன்றாது. வாழ்வதற்குரிய தமிழ், சைவம், உண்மை, அறம், அவற்றை அறிவுறுத்தக்கூடிய சான்றோர்களாகிய புலவர் வாழ்வு இவற்றையெல்லாம் பாதுகாப்பது அரசியலின் குறிக்கோள். அத்தகைய குறிக்கோளுடைய அரசராக விளங்கியவர் பாற்கரசேதுபதி. உயர் நெறியைப் பாதுகாக்க வேண்டுமென்னும் இவருடைய பார்வை வீரம் சார்ந்தது. இதனை அரசியல் மறம் எனப் போற்றவேண்டும். அரசியலார் அன்றாட நடைமுறைவேலைகளிலேயே கவனம் செலுத்துவர். வரி வசூலித்தல், அதனை செலவு செய்தல், அலுவலர்களைப் பராமரித்தல் போன்ற கடமைகளை மட்டுமே சிந்தித்துச் செயல்படுவர். ஆனால் சேதுபதி அரசர் தமிழ் மரபு சிதைந்து சீரழிய இருந்தநேரத்தில் அறப்போர் ஒன்று நிகழ்த்தினார். மறம் செறிந்த அறப்போர் தன்னுடைய கருவூலத்துச் செல்வமெல்லாம் இத்தகைய சிதைவிலிருந்து மக்கள் மபுகளை மீட்டெடுக்கும் திருப்பணிகளுக்கே என்று உயர்தனிக் குறிக்கோளுடன் வாழ்ந்தார். இந்த வாழ்வு ஒருவீரவாழ்வு. இதனை நிறைவேற்றும் ஆளுமை வரலாற்றில் பாற்கர சேதுபதி ஒருவருக்கே வாய்த்தது. இதனை அன்போடு இயைந்த மறம் எனலாம். உள்ளம் காதலிக்கின்ற நற்செயல்களை நிறைவேற்றுவதற்குரிய உள்ளத்தின் உறுதி மறம் எனப்படும். அந்நியர் ஆட்சியில் தமிழ், தமிழர் மரபு, சமயம் ஆகிய அரியவற்றுள் அரியதைக் காக்கும் வீரம் பாற்கரசேதுபதியின் தனியா ஆளுமையேயாகும். இதனை வீரத்துள் வீரம் எனப் போற்ற வேண்டும். அதனால் சிவசம்புப் புலவர் தேவை நகரை இவ்வரசர் பெருமகன் ஆட்சி செய்யாவிட்டால் தமிழும் சைவமும் உண்மையும் அறங்களும் சிதைந்துபோய் மங்கி மறைந்திருக்கும் என்னும் செய்தியை

எடுத்துரைத்து அதனைப்பாதுகாத்த வரலாற்று நாயகன் பாற்கர சேதுபதி எனப் போற்றுகின்றார்.

ஈண்டுச் சமகாலத்தில் வாழ்ந்த வள்ளலார் இராமலிங்க சுவாமிகளின் சைவம், செந்தமிழ் பற்றிய கருத்து சிந்தனைக்கு உணவாகும்.

"சைவர் எனும் நின்னடியார் சபைநடுவே வைத்தருளித் தெய்வமென்று வளர்க்கின்றாய் சிற்சபையில் நடிக்கின்றாய்", என்ற அடிகளும்,

"எந்தை உனைப் பாடிமகிழ்ந்து இன்புறவே வைத்தருளிச் செந்தமிழின் வளர்க்கின்றாய் சிற்சபையில் நடிக்கின்றாய்" என்ற அடிகளும் திருவருள் நெறியை உணர்த்துவதாகும். பாற்கர வேள் சைவத்தையும் செந்தமிழையும் பாதுகாப்பதைத் தம்வாழ்வுக் குறிக்கோளாகக் கொண்டு ஒழுகினார். செந்தமிழும் சைவமும் தமிழர் வாழ்வோடு நீக்கமறக்கலந்து அவர்தம் வாழ்வை ஒளிபெறச் செய்ய வேண்டும் என்பது நம்முன்னோர் உள்ளக் கிடக்கை.

கரும்பு உண்பார்க்கு அடிக்கரும்பு இனிக்கும். நுனிக்கரும்பு கைக்கும் செந்தமிழ்க் கரும்பு அடிமுதல் நுனி வரை இனிக்கும். அதனால் தமிழ்க் கல்வியை கைப்பிலாத்துய்ய தமிழ்க் கல்வி எனப் போற்றுகிறார்.

வீடும் வேண்டா விறலினர் கூடும் அன்பினில் கும்பிடும் அன்பு நெறி சைவ நெறி. ஆகையினால் ஒப்பிலாச் சைவம் எனப் போற்றுகின்றார். உண்மையும் அறமுமே வாழ்க்கையில் உய்வு பெறுதற்குரிய குறிக்கோள் ஆகும். அதனைத் தேடலே வாழ்க்கையாகும். பாற்கர சேதுபதியின் வாழ்க்கை இத்தகைய குறிக்கோளின் மைய அச்சில் சுழன்ற ஆட்சிச் சக்கரம் என்னும் குறிப்பு அறிந்து போற்றுதற்குரியதாகும். மெய்நெறி உணர்த்தும் திருவள்ளுவர் பாயிரத்தில் நீர்த்தார் பெருமையைப் போற்றுவார். ஆசிரியரும் தப்பிலாப் பாவலர் எனப் போற்றுகின்றார்.

***கலித்துறை***

*"கால்வாய்ந்த வையைப் புதுநீர்*
*பெருகக் களமர்மகிழ்*
*சேல்வாய்ந்த பண்ணையந் தேவையிற்*
*பாற்கரச் செல்வற்குச்செங்*
*கோல்வாய்ந்த நாண்முதற் கொண்டுநின்*
*றாடிய கூத்தொன்றுதான்*
*மேல்வாய்ந்த நல்லறத் தேவுக்கு*
*வாய்ந்த விநோதவின்பே."* [14]

பன்னெடுங்காலமாகத் தென்பாண்டி நாட்டு மக்கள் வையைப் புதுப் புனலைப் போற்றிவாழும் பெருவாழ்வு உடையவர்கள். சங்ககாலத்தில் பரிபாடலில் நல்லந்துவனார் என்னும் புலவர் பெருமகன் வையைப் புனலின் புகழைச்,

*"மாசு இல் பனுவற் புலவர் புகழ் புல*
*நாவின் புனைந்த நன்கவிதை மாறாமை"*

உடையதெனக் குறிப்பிடுகிறார். சான்றோர் தம் அறிவு நலம் சிறக்க இடைவிடாது புனைந்த கவிதைப் பேறுடையது வையையாறு. சான்றோர் நகை அமர் காதலர் நாளணி கூட்டும் புதுப்புனல் என்பாடுவர்.

பாண்டிய நாட்டின் மேற்கு மலையில் தோன்றி தமிழ் மதுரையைத் தழுவிச்சேதுபதி நாட்டிற்கு வளம் சேர்ப்பது வையையாறு. புதுப்புனல் ஆடிமகிழ்வது இன்பப் பேறு. திருப்பாவை, திருவெம்பாவை போன்ற இலக்கியங்கள் எல்லாம் நீராடல் இன்பத்தை எடுத்துரைப்பனவாகும். ஊர் மக்கள் அனைவரும் புதுப்புனல் ஆடவையையாற்றுக்குச் சென்று மகிழ்வர். காதலர் கூட்டமும் இந்த அரிய வாய்ப்பை நழுவவிடுவதில்லை. பெண்கள் கூட்டம் சேலன்ன கண்கள் பரப்பி கண்டார் உள்ளம் கலங்க வையைப் புதுப்புனலும் கலங்கி வர நீராடி மகிழ்வர். சேதுபதி நாட்டுக் கழனியில் உழவர் குடிப் பெண்டிரும் ஆடவரும் ஆடல்பாடலுடன் குரவை எழுப்பி கூத்து ஆடுவர். நாடெங்கும் திருவிழாப் பூண்டிருக்கும்.

நாடெங்கும் ஆண்களும் பெண்களும் ஆடிமகிழும் கலைநயம் நிறைந்த காட்சி மறுவதில்லை.

பாற்கர சேதுபதி செங்கோல் அரசு செலுத்தியகாலம் தொடங்கி மாறா விளைவும் செல்வப் பெருக்கும் அவர்க்குப் பெரும்புகழை ஈட்டியது. காதலும் வென்றியும் உடைய திருநாட்டில் மக்கள் ஆடுவது விநோதக் கூத்து ஒன்றுதான். வேறு கூத்துக்கள் இல்லை எனக் கூறுவது அறிந்து இன்புறத்தக்கது. விநோதக் கூத்தாவது மன்னர் மகிழ விநோதங் காணும் கூத்து என்பதாம். விநோதக் கூத்து குரவை, கலிநயம், குடக்கூத்து, காரணம் என்ப. சேதுபதி நாட்டில் மக்கள் ஆடிய கூத்து குரவைக் கூத்தேயாகும். குரவை என்பது காமமும் வென்றியும் பொருளாகக் குரவைப்பாட்டுடன் மக்கள் கை பிணைந்து ஆடுவதாகும்.

நற்றிணை 276 ஆம் பாடலில் காதலிதன் காதலனை ஆர்வத்தால் தான் வாழும் ஊருக்கு வந்து கள்ளைப் பருகி தாம் அயரும் குரவையுங் கண்டு மகிழ்ந்து செல்லுமாறு அழைக்கின்றாள். "காதலியின் உறவினர்கள் உலகியல் அறிவராகலின் காதலனை எதிர்கொண்டு விரும்பிப் போற்றுவர் என்பது குறிப்பிப்பான் நறவுண்டு குரவையுங் காண்பாய் என்றாள்" என உரை ஆசிரியர் குறிப்பிடுகின்றார். குறிப்பாகக் குரவைக் கூத்து மாதரொடு ஆடவர் குழுமியாடும் இசைக் கூத்து; கல்லென் கறங்கிசை முழங்கக் காதலர்களுடைய காதல் உணர்வை மேலோங்கச் செய்து மணம் புரிவித்து சமூக வாழ்க்கையில் களிப்பும் உவகையும் சிறக்கச் செய்வது; நாகரிகம் மிக்க கூட்டு வாழ்க்கையைச் சமுதாயம் உறுதிசெய்த காலத்து இத்தகைய இசைக் கூத்துக்கள் சமுதாயத்தில் இடம் பெற்றன. அவற்றை இலக்கியம் பாடுபொருளாகக் கொண்டது.

நம் ஆசிரியர் இதனை நன்குணர்ந்து, பாற்கர சேதுபதி நாட்டில் கலைநயம் நிறைந்த இன்பவாழ்க்கையையும் அரசியல் சமூகப் பொருளாதார நிறைவையும், இச்சிறிய பாடலில் கவிதை இன்பம் பயக்க எடுத்துரைத்திருப்பது கற்கும் தோறும் கற்பனை இன்பமும் கருத்து இன்பமும் பயப்பதாகும்.

(தொடரும்)

# மனிதநேயம்

கா. மனோகரன்,
அலுவலக மேலாளர், தமிழ்ச்சங்கம்.

*முன்னுரை*

உலகத்தில் தோன்றிய உயிரினங்களில் முதன்மையானவன் மனிதன். மற்றெந்த உயிரினங்களையும் விடச் சிந்திக்கவும், நேசிக்கவும் தெரிந்த மனமென்னும் ஆன்மா மனிதனுக்கு மட்டுமே உள்ளது. ஆன்மாவைப் பற்றி உள்ளார்ந்து சிந்தித்தால் அது மிகவும் நுட்பமானதும் மர்மமானதுமாக இருப்பதை அறியலாம். மனித ஆன்மா மிகவும் நேசிக்கத் தகுதியானது. மனிதத் தத்துவத்திற்கு நாம் மனிதாபிமானம் என்றும், மானுடம் என்றும் பெயரிட்டுக் கூறுகிறோம். மனிதாபிமானத்தை மனிதநேயத்தைப் பற்றி இலக்கியங்களின் வழிக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

*மனிதாபிமானம்* **(HUMANISM)**

மனிதாபிமானம் என்பது என்ன? மானிடத்தின் மீது அக்கறையுள்ள அதன் பெருமைக்கும், மதிப்புக்கும் முன்னுரிமை அளிக்கின்ற எந்தவொரு செயல்பாடும், சிந்தனையும் மனிதாபிமானம் எனப்படும் என்று 'The Random house Dictionary of the English language கூறுகிறது.

*இலக்கியங்களில் மானிடம்*

இலக்கியங்கள் மானிட வாழ்க்கையைப் பிரதிபலிப்பன. பிறப்பில் மானிடராய்ப் பிறத்தல் பெரும் பேற்றிற்குரியது. இதனை உணர்ந்த ஔவையாரும், 'அரியது கேட்கின் வரிவடிவேலோய் மக்கள் யாக்கையிற் பிறத்தலும் அரிதே' என்று பாடிச் சென்றுள்ளார். வாழ்வைக் கட்டிக் காக்கும் மானிடத்தின் பெருமையைக் கம்பன் சுக்ரீவன் வாயிலாகக் கூறுகிறான்.

---

"Any system or mode of thought or action in which human interests, Values and dignity are taken to be of primary importance as in moral judegement".

இராமனைப் பற்றிச் செவியார அனுமனிடமிருந்து கேட்டறிந்தவன் சுக்ரீவன். இராமனை நேரில் பார்த்ததும்,

"தேறினன் அமரர்க் கெல்லாம் தேவராம் தேவர் அன்றே
மாறி இப்பிறப்பில் வந்தார் மானிட ராகி மன்னோ!
ஆறுகொள் சடிலத் தானும் அயனும் என்றிவர் களாதி
வேறுள குழுவை எல்லாம் மானுடம் வென்ற தன்றே!" என்று,

சிவனையும், பிரம்மனையும் மற்றுமுள்ள கடவுளர்களையும் மானுடம் வென்றுவிட்டது என்கிறான். பாரதியும்,

"வானில் பறக்கின்ற புள்ளெல்லாம் நான்
மண்ணில் திரியும் விலங்கெல்லாம் நான்
கானில் தெரியும் மரமெல்லாம் நான்
காற்றும் புனலும் கடலும் நான்
விண்ணில் தெரிகின்ற மீனெல்லாம் நான்
வெட்டவெளியில் விரிவெலாம் நான்
மண்ணில் கிடக்கும் புழுவெல்லாம் நான்
வாரியிலுள்ள உயிரெல்லாம் நான்" என்று,

மண்ணும் விண்ணும் தன்னுள் நிறைந்துள்ளதைப் பார்க்கிறான். இலக்கியத்தைப் பற்றிக் கூறும்போது மனிதனுடைய சிறப்பை, "மனிதன்! எத்தனை கம்பீரமாக ஒலிக்கிறது இச்சொல்! எனக்கு மனிதனைவிடச் சிறந்த கருத்துக்கள் இல்லை மனிதன் மட்டுந்தான் எல்லாப் பொருள்களுக்கும் எல்லாக் கருத்துக்களுக்கும் படைப்பாளி; அற்புதம் செய்வோன் அவனே; இயற்கைச் சக்திகளின் எதிர்காலத் தலைவன் அவனே; இவ் உலகின் அதியற்புத அழகுப்பொருட்கள் எல்லாம் அவனது உழைப்பால் ஆனவை; திறன்மிக்க மனிதக் கரங்களால் ஆனவை; நான் மனிதனுக்குத் தலை வணங்குகிறேன்; ஏனெனில் மனித அறிவிற்கும் கற்பனைக்கும் அப்பால் நான் இவ்வுலகில் வேறொன்றையும் காணவில்லை" என்று கூறுகிறார் மாக்சிம் கார்க்கி.

அத்தகு மனிதன் தான் வாழுகின்ற இம்மை வாழ்விற்கும் மேலாக மறுமை வாழ்வின் செல்வத்தை விரும்பின் செய்தக்க காரியம் இன்னதெனக் கூறவந்த ஒரு புலவர் 'நீரின் றமையா யாக்கைக் கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்று கூறுகிறார். அதாவது உணவை முதலாக உடையது உடம்பு. அவ்வுடம்பு நிலைபெற அளிக்கக் கூடிய உணவைக் கொடுப்பது உயிரைக் கொடுப்பதாகும். இதனை நன்றாக உய்த்துணர்ந்த திருமூலர், 'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்; உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்' எனவும் 'உடம்புள்ளே உத்தமன் கோயில் கொண்டான்' எனவும் மனித உடம்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவார். மேலும், 'மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்று மணிமேகலை உரைக்கிறது. ஆதலின் மானிடத்தைப் பற்றிய சிந்தனையின் மனித உடம்பைப் பேணிக் காத்து அதனுள் இயங்குகின்ற உயிராகிய ஆன்மாவை நேசித்தல் மனித நேயத்தின் தலைமைப் பண்பு எனக் கொள்ளத்தகும்.

### *வீரம் விளங்குதல்*

பண்புகளுக்கெலாம் அடிநாதமாய் விளங்கும் நேயம் என்பது அபிமானம், அன்பு, இரக்கம் ஆகியனவாகக் கூறலாம். வீரத்திற்கு அடிப்படையாக அமைவது நெஞ்சின் ஈரமே. புறநானூற்றுச் சமுதாயத்திலே வீரனொருவன் இருக்கிறான். அவன் நாள்தோறும் வாரிக் கொடுக்கக் கூடிய செல்வம் உடையவனல்லன். எனினும் தன்னிடத்தே வருகின்ற வறியோர்க்கு இல்லை எனச் சொல்லி மறுக்காதவன். ஒருநாள் அவனிடத்தே ஒரு பாணன் வருகிறான். வருகின்ற அப்பாணனுடைய ஒட்டியுளர்ந்த ''உண்ணா மருங்கினை''க் கண்ட வீரன், அவனுடைய வறுமையை நீக்கப் பொருளீட்டும் பொருட்டுப் போரிட எண்ணித் தன்னுடைய ஊரின் வலிய கொல்லனை அழைத்துக் கூரிய வேலினை உடனே வடித்துத் தருமாறு வேண்டுகிறான்.

எனவே போர்செய்தேனும் பொருளீட்ட வேண்டும் என்று எண்ணிய அவனுடைய வீரத்திற்கு அடிப்படையாக அமைவது எது?

வறுமைப் பிணியைப் போக்க வேண்டும் என்ற அவனது நெஞ்சிற பிறந்த இறக்க உணர்வே ஆகும். இதனை,

"யாந்தன் னிரக்குங் காலைத் தானெம்
உண்ணா மருங்குல் காட்டித் தன்னூர்க்
கருங்கைக் கொல்லனை யிரக்கும்
திருந்திலை நெடுவேல் வடித்திசி னெனவே'

-(புறம் 180-வரி 10-13)

எனவரும் புறநானூற்றுப் பாடற் பகுதியால் அறியலாம். 'அறத்திற்கே அன்பு சார்பு என்ப அறியார் மறத்திற்கும் அஃதே துணை' என்னும் வள்ளுவர் கூற்றும், 'தனியொருவனுக் குணவில்லை யெனில் சகத்தினை அழித்திடுவோம்' என்னும் பாரதி வாக்கும் இவண் உணரத்தக்கன.

*உலகம் நிலைத்தல்*

வறட்சி நீங்கிய செழுமை உடையதாக இவ்வுலகம் அமைய வேண்டுமெனில், உலகிடத்துள்ள மனிதர்கள் வளமான மனமுடையவர்களாகத் திகழ வேண்டும். மனித நேயமிக்க நன்மக்கள், எதையும் தனித்து நுகரமாட்டார்கள். பிறரோடும் பகிர்ந்துண்பர். அது இந்திரர்க்குரிய அமுதமென்னினும் தனித்து உண்ணமாட்டார்கள். ஒரு செயலினால் தமக்குப் புகழ் கிடைக்குமாயின் உயிரையும் கொடுப்பர். அதனால் பழிவருமாயின் உலகமுழுதும் பெறினும் கொள்ளமாட்டார். இத்தகு மாட்சிமைப் பண்புகள் அமைந்த நல்லியலார் உள்ளமையினால்தான் இவ்வுலகம் உள்ளது.

"உண்டா லம்மவிவ் வுலக மிந்திரர்
அமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்வல ரயர்விலர்
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மையானே"

எனவரும் புறப்பாடல் வரிகளோடு,

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று"

எனவரும் திருக்குறள் பகுதியும்,

"அறிவ தறிந்தடங்கி யஞ்சுவ தஞ்சி
யுறுவ துலகுவப்பச் செய்து - பெறுவதனா
லின்புற்று வாழு மியல்பினா ரெஞ்ஞான்றுந்
துன்புற்று வாழ்த லரிது"

எனவரும் நாலடியார் கருத்தும்,

"மன் உயிர் ஓம்பி அருள் ஆள்வார்க்கு இல் என்ப; தன்னுயிர் அஞ்சும் வினை" என்ற குறளும் ஒருங்கே எண்ணி மகிழத் தக்கன. மேலும், உலகிலுள்ள எல்லா ஊர்களையும் தம்முடைய ஊராகவும், அவ்வூரின்கண் வாழ்வோரெல்லாம் தம் சுற்றத்தார் எனவும் கூறிப் பெருமிதங்கொள்வார் கணியன் பூங்குன்றனார். இதனையே வள்ளுவரும்,

"யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு"

என்று கூறுவார்

## உயிர்களிடத்து இரங்கல்

உலகில் வாழுகின்ற மனிதர்கள் தம்மையொத்த பிற மனிதரிடத்துக் காட்டுகின்ற அன்பு அல்லது இரக்கம், மனிதனைப் போன்று சிந்தித்துச் செயல்பட்டு வாழத் தெரியாமல் பிறந்து, இருந்து, இறந்துபோகும் உயிரினங்களிடத்தும், உயிர்த்து வளர்ந்து ஒடுங்கிவிடும் தாவரம் போன்றவற் றிடத்தும் கூட இரக்கம் காட்டி நேசிக்கும் உலகளாவிய பண்பாக வளர வேண்டும். இவ்வாறு மனித மனத்தோடு உறவான மனிதநேயச் சிந்தனையாளர் திருவருட் பிரகாச வள்ளலார் ஆவார். அவர்,

"அப்பா நான் வேண்டுதல் கேட் டருள் புரிதல் வேண்டும்
ஆருயிர் கட்கெல்லாம் நான் அன்பு செய்தல் வேண்டும்"

என்று அனைத்து உயிர்களிடத்தும் அருள்செய்ய வேண்டுகிறார். மேலும்,

"எவ்வுயிர்த் திரளு மென்னுயி ரெனவே
மண்ணில் இன்புறச் செயவும்
அவ்வுயிர் களுக்கு வருமிடை யூற்றை
யகற்றியே யச்சநீக் கிடவும்"

எனக்கருள்செய்திடுக இறைவா எனவும்,

"வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன் பசியினா லிளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின் றோரென்
நேருறக் கண்டுளந் துடித்தேன்
ஈடின்மா னிகளா யேழைக ளாய்நெஞ்
சிளைத்தவர் தமைக்கண்டே யிளைத்தேன்
துண்ணெனக் கொடியோர் பிறவுயிர் கொல்லத்
தொடங்கிய போதெலாம் பயந்தேன்
கண்ணினா லையோ பிறவுயிர் பதைக்கக்
கண்டு என்னுள்ளம் பதைத்தேன்" எனவும்

எவ்வுயிரும் தம்முயிர் போலக் கருதி, அவ்வுயிர்த் துன்பத்தைக் கண்டபோதெல்லாம் உளம் வாடியும் பதைத்தும், துடித்தும், துயருற்று, இப்பேர்ப்பட்ட 'ஏழை உலகத் துயரத்தை நான் பொறுக்க மாட்டேன். அத்துயரத்தை மாற்ற நின் அருள் நிலையைக் கொடுப்பதாயின் அதனை இப்போதே கொடுத்துவிடு' என்று இறைவனிடம் இறைஞ்சுகின்றார். இதுவன்றே மனித நேயம்.

*ஈதல் சிறப்பு*

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதிய மில்லை உயிர்க்கு" என்பது வள்ளுவம்

ஒருவன் தம்மிடத்தில் உள்ள பொருளைப் பிறர்க்குக் கொடுக்காது தாமே வைத்திருந்து விட்டு மாண்டு போவதில் உயிர்க்கு என்ன பயன் விளையப் போகிறது? மாறாக ஈதலினால் ஏற்படக் கூடிய புகழ்மிக்க வாழ்க்கையைப் பற்றி அறிய அதியமான் நெடுமான் அஞ்சியை ஔவையார் பாடிய பாட்டு நமக்கு உதவுகிறது. ஔவையார்,

"சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே

..........................................................................

..........................................................................

..........................................................................

பனித்துறைப் பகன்றை நறைக்கொண் மாமலர்
சூடாது வைகியாங்குப் பிறர்க் கொன்
றீயாது வீயு முயிர் தவப்பலவே" என்று பாடுகிறார்.

இங்ஙனம் சிறிதளவே உடைய மதுவினைப் பெற்றிருக்கின்ற போதும், அதிக அளவு மதுவைப் பெற்றிருக்கின்ற போதும் அவற்றையும், உண்ணுஞ் சோறு குறைவானதாயிருந்தாலும் நிறை அளவாக இருந்தாலும் அவற்றை யெல்லாம் எங்களுக்குக் கொடுத்து ம கிழ்வான் அதியமான் நெடுமான் அஞ்சி. அத்தகைய ஈகையாளனைப் போன்று அல்லாமல் தன்னலமிக்கு மாய்ந்து போகும் உயிர்கள் மிகப்பல உள்ளன. இவ்வுயிர்கள் குளிர்ந்த நீர்த்துறையிடத்து மலர்ந்த பகன்றையினது பெரியமலர் பிறரால் சூடப்படாமல் வீணே கழிந்ததுபோல மாய்ந்து போவர் ஈதலின் சிறப்பு அனைவரும் அறிந்தொழுக வேண்டிய பண்பு என்பது ஔவையாரின் கருத்தாகும்.

மேலும், பாரி வள்ளலின் கைவண்மைபற்றிக் கூறவந்த கபிலரும்,

"புல்லிலை எருக்கம் ஆயினும்
கடவுள் பேணேம் என்னா ஆங்கு
மடவர் மெல்லியர் செலினும்
கடவன் பாரி கைவண்மையே" என்று கூறுவார்.

*முடிவுரை*

பொருளில்லாதவர்க்கு இவ்வுலகமில்லை அதுபோல் அருள் இல்லாதவர்க்கு அவ்வுலகமில்லை என்பதற்கிணங்க அருள் நிறைந்த வாழ்வொன்றே மனிதனுக்கு நிம்மதியைத் தரும். இதற்கு மன ஒருமைப்பாடே நல்ல நெறியாகும். மனம் விரும்பி ஏற்படுகின்ற மனிதநேய ஒருமைப் பாட்டின் மூலமாகத்தான் உலகமக்கள் அனைவரும் வேற்றுமை நீங்கி ஒற்றுமையாக ஒரு குடைக்கீழ் வாழும் உன்னதமான நிலை ஏற்பட இயலும்.

வாழ்க மானிடம்! வளர்க மனித நேயம்!!

# புதினம் புனைந்த புத்தொளிச் சித்தர் - கல்கி

ஆதி. பாலசுந்தரன், தனிநிலை ஆய்வர்

"தொட்டில் ஆட்டும் தாய்மார்களும், மாவு அரைக்கும் பெண்களும் ஒரு கையால் தங்களின் வேலையைச் செய்து கொண்டே, மற்றொரு கையால் தமிழ்ப் பத்திரிகைகளைப் படிக்கச் செய்தவர் கல்கி".

இவ்வாறு ரசிகமணி டி.கே.சி. யால் பாராட்டப் பெற்றவர் கல்கி.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் விளிம்பு முதல் இருபதாம் நூற்றாண்டின் மத்திய காலம் வரை தமிழ் கூறும் நல்உலகில் தமது உடலால் வாழ்ந்தவர் கல்கி.

சிறுகதை, புதினம் ஆகிய உரைநடை மறுமலர்ச்சி இலக்கியங்களுக்கு வித்திட்டவர்கள்.

வங்கத்திலே ... தாகூர், சரத்சந்திரர், பங்கிம் சந்திரர்.

மராட்டியத்தில் ... காண்டேகர்

தமிழகத்தில் ... கல்கி, புதுமைப் பித்தன்,

"பொறுப்பற்ற முறையில் கருத்துக்களை அள்ளித் தெளிப்பது தவறு பொறுப்பில்லாமல் கருத்துக்களை ஏற்றுக் கொள்வது அதைக் காட்டிலும் தவறு" என்ற சமூக உணர்வை மிகுதியும் மதித்தவர் கல்கி.

எனவேதான், தமது எழுத்து, பேச்சு, செயல்கள் ஆகியவற்றுக்குச் சமூக உணர்வை ஆதார சுருதியாக அமைத்துக் கொண்டார்.

அறம், நேர்மை இரண்டின் மேல்வரிச் சட்டமாகக் கல்கியின் எழுத்துக்கள் மிளிர்வதால் அவை இன்றும் நிலைத்து வாழ்கின்றன.

மருத்துவர் ஒருவர் மறைந்தால், அவருடைய ஆலோசனை மற்றவர்களுக்குக் கிடைக்காமல் போய்விடுகிறது. வழக்கறிஞரின் வாழ்வுக்குப் பிறகு அவருடைய வாதத்தின் பயன் பிறருக்குக் கிடைக்க வாய்ப்பில்லை.

ஆனால், சிறந்த எழுத்தாளர் ஒருவர் மறைந்தாலும் அவருடைய எழுத்துக்கள், கல்லில் பொறித்த உயிர் எழுத்துக்களாய்க் காலத்தை வென்று, என்றும் மெய்யெழுத்துக்களாய் நின்று உண்மையை

உணர்த்துகின்றன. வேட்கை உடையவர்களின் கரங்களைப் பிடித்துக் குறிக்கோளை நோக்கி வழி நடத்திச் செல்லுகின்றன.

கல்கியின் எழுத்துக்கள் பட்டில் நெய்த பொன் இழையாய்ச் சுடர்விட்டுச் சமூகத்துக்கு வழிகாட்டுகின்றன.

மக்களைச் சமூகத்துக்குத் தகுதி உடையவர்களாக உருவாக்க வேண்டியவர்கள் எழுத்தாளர்கள். சமூகத்தின் நியாயமான வளர்ச்சிக்கு அவர்கள் உதவ வேண்டும். சட்டத்துக்கும், நீதிக்கும் உள்ள மகத்தான பொறுப்பு எழுத்தாளர்களுக்கும் உண்டு.

இவை, எழுதாக் கிளவிகளாக எழுத்தாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட விதிகள். தமிழக எழுத்துலகின் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கிட, இந்த விதிகளைத் தமது உள்ளங்கையில் வரைந்து வைத்துக் கொண்டவர் கல்கி.

ஓடிவரும் வெள்ளப்பெருக்கை ஆற்றின் இரண்டு கரைகள் நெறிப்படுத்துவதைப் போல, எழுத்தோவியத்துக்கு நாகரிகம், பண்பாடு ஆகிய சட்டத்தை இரண்டு கரைகளாக அமைத்துக் கொண்டார்.

வட சொற்கள் கலந்த மணிப்பிரவாள நடை அமைந்த கதைகள் ஒருபுறம். பழுத்த தமிழ்ச் சொல் நடை பயின்ற கதைகள் மற்றொரு புறம்.

இவற்றுக்கு நடுவே, பழகு தமிழில், புரிகின்ற நடையில், தெள்ளத் தெளிந்த நீரோட்டமாக அமைந்திருந்தது கல்கியின் நடை.

எழுத்திலே அழுத்தம் கருத்திலே உறுதி ஆகிய இரண்டும் இரட்டைக் கிளவியாய்ப் பிரிக்க முடியாமல் இணைந்து, அடுக்குத் தொடராகத் தொடர்ந்து நின்றன கல்கியின் எழுத்தில்,

திரு.வி.க. வின் பத்திரிக்கைத் தொடர்புப் பயிற்சி, கல்கியின் எழுத்து வன்மைக்கு உரம் ஊட்டியது.

வாசகர்கள் எதை விரும்புகின்றார்கள் எப்படி எழுதினால் வாசகர்களின் உள்ளங்களைக் கவரலாம் என்று எண்ணும் வாணிக நோக்கில் கல்கி எழுதவில்லை. சமுதாயத்தின் உயிர் நாடியைப் பிடித்துப் பார்த்து, மக்களின் உள்ளத்தை மேம்படுத்தும் கருத்துக்களை எளிமையாக, தெளிவாகக் கூறுகிறார் கல்கி.

சிறிய சொற்றொடர், மிக நீண்ட தொடர் – இப்படி இல்லாமல் ஒரே அளவாகச் சொற்றொடரை அமைத்துக் கொண்டார்.

சிறுகதை எப்படி அமைய வேண்டும்? Short Story is a lie to create to truth - சிறுகதை, உண்மையை நிலை நிறுத்துவதற்காகப் புனைந்து காட்டப்படும் ஒரு பொய்! என்று சொல்லுவார்கள்.

சிறப்பாக எடுக்கப்பட்ட புகைப்படத்துக்கு நிகர் சிறுகதை! எப்படி?

குறிப்பிட்ட காட்சியைக் குறிப்பிட்ட வினாடிக்குள், உள்ளது உள்ளபடியே காட்டுவது புகைப்படம்.

ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியை, ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன் கூறுவது சிறுகதை.

வித்தகர் வரையும் கைவினைச் சித்திரங்களில், கை வண்ணக் கலவையை எண்ணிய வண்ணம் தீட்டி எழில் சேர்க்கலாம் மெருகூட்டலாம்.

ஆனால், புகைப்படத்தில் விரும்பிய வண்ணம் செய்ய இயலாது. அதுபோல, நல்ல சிறுகதையில் வரம்புக்கு விஞ்சிய நிகழ்ச்சிகளைப் புனைந்து, கதைப் போக்கின் ஒருமையைக் குன்றச் செய்தல் கூடாது.

ஈட்டி பாய்வதைப் போல், நேராகப் பாய்ந்து கதையின் மையக் கருத்தைப் படிப்பவர் நெஞ்சில் பதியச் செய்வது சிறுகதை.

இது சிறுகதை வடிவ விளக்கம்

இச்சிறுகதை உத்தியைத் தமக்கே உரிய பாணியில் வடிவமைத்துச் சிறுகதையின் வெற்றிச் சிகரத்தை எட்டிப் பிடித்தவர் கல்கி.

இயல்பாக அமைந்துள்ள எழுத்துக்களின்அகரவரிசையை இடம் மாற்றி, மணக்கும் மலர்ச் சொற்களாக உருவாக்கி அற்புதம் நிகழ்த்தினார்.

சொல்லின் பொருளும், சுவைபொதி உட் பொருளும் எல்லாப் பொருளும் இயைந்து வரும் சொற்கள் கல்கியின் கட்டளைக்குக் காத்து நின்றன!

சொற்களை முன்பின் மாற்றி அலங்காரவாக்கியம் ஆக்கி, சொல்மாய வித்தை காட்டியவர் அவர்!

மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரம் ...சமூக நீதியை உணர்த்துவதற்கு!

பெண் உரிமை, விதவைத் திருமணம் இவற்றை வலியுறுத்த அ. மாதவய்யாவின் பத்மாவதியும், ராஜம் அய்யரின் கமலாம்பாள் சரித்திரமும்!

இவை, கல்கிக்கு முன் தமிழில் எழுதப்பட்ட புதினங்கள்.

ஆனால்...

தேச விடுதலை, தீண்டாமை ஒழிப்பு, சாதி பேதம் அகற்றுதல், மதுவிலக்கு ஆகிய சமுதாய நன்மைகளைச் சித்தரித்துக் காட்டும் புதினங்கள் அக்காலத்தில் மிகவும் தேவைப்பட்டன.

காலத்தின் கட்டாயத்தைக் கட்டளையாகவும், கடமையாகவும் கருதிப் புதினம் புனைந்து அத்தேவையை நிறைவு செய்தவர் கல்கி.

கல்கியின் கற்பனை வலிமையால் புதின மாந்தர்கள், வாசகர்களின் நெஞ்சிலே நிறைந்து வலம் வருகிறார்கள்!

முன்னாளின் அரையரும், மூவருள் சோழரும் காவிரிக் கரையில் கவின்மிகு நிலா ஒளியில் உலாப் போகிறார்கள்.

ராஜகேசரி, கோப்பரகேசரி, சம்பு வரையர், மலையமான், மிலாடுடையார், வந்தியத்தேவன், பழுவேட்டரையர்... இந்தப் புதின மாந்தர்கள் இன்றும் நமது மனத்திரையில் தோன்றிப் பேசுவதை அனுபவித்து மகிழ்கிறோம்.

காவிரியும், சோழமண்டலமும் இன்றும் கருத்துக்கு விருந்தாக நமக்குக் கதை சொல்லுகின்றன... கல்கியின் பொன்னியின் செல்வன் மூலமாக.

ஆம்! கல்வெட்டுப் பேரறிஞர் டி.வி. சதாசிவப் பண்டாரத்தார் எழுதிய 'பிற்காலச் சோழர் வரலாறு', கல்கியின் சிந்தனைக்கு விருந்தாக அமைந்தது. விளைவு ... 'பொன்னியின் செல்வன்' புதினம் பிறந்தது!

'பார்த்திபன் கனவு புதினம்', கல்கியின் கற்பனையில் உருவாவதற்கு, டாக்டர் மா. இராச மாணிக்கனாரின் 'பல்லவர் வரலாறே' காரணம்.

கற்பாறைகளிலே மிளிரும் மரபுரிமைச் சின்னங்களைக் கண்டு மகிழ, நமது கரங்களைப் பிடித்து, மாமல்லபுரக் கடற்கரைக்கே அழைத்துச் செல்கிறார் கல்கி 'பார்த்திபன் கனவு' புதினம் மூலமாக.

மாமல்லபுரச் சிற்ப வல்லுநர் சிலை செதுக்கும்ஓசை, தாள ஓசையாக அந்தப் புதினத்தின் மூலம், இப்போதும் நமது செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

காலத்தை வென்று கருவூலங்களாகக் காட்சி தரும் கலையழகு அரண்மனை, ஆடகமாடம், திருவோலக்க மண்டபம், நீராழி மண்டபம், பொன் மாளிகை, வீரம் விளைவித்த போர்க்களங்கள், பாடல் பெற்ற திருக்கோயில்கள் ஆகிய பழைய நினைவுச் சின்னங்களைத் தம் புதினங்களில் இணைத்து நமது மகிழ்வுணர்வைத் தூண்டியவர் கல்கி.

நாயன்மார்கள், ஆழ்வார்களின் அருட் பாடல்களைப் பொருத்தமான இடங்களில் சேர்த்துப் புதினங்களுக்குப் பொலிவு சேர்த்தார்.

தமிழ் மன்னர் வழங்கிச் சிறப்புச் செய்த காவிதி, எட்டி, ஏனாதி முதலான விருதுகளையும் புதினங்களில் சேர்த்து நினைவூட்டினார்.

ஓலைச் சுவடிகளில் புதைபடிவங்களாய் மறைந்த, அரு உருவச் சின்ன அடையாளமாய்க் கல்வெட்டுக்களிலே காட்சி அளித்த தமிழகப் பழம்பெயர்கள் பல, கல்கியின் புதினங்களாய் புத்தொளி பெற்றுச் சிறந்தன.

தாம் பார்த்தவற்றையும், கேள்விப்பட்டவற்றையும் தம் புதினங்களில் பொருத்தமான இடங்களில் சேர்த்து, அவற்றுக்குப் பெருமை சேர்த்துவிடுவார்.

அப்படிச் சேர்க்கப்பட்டவை மாமல்லபுரம் கடற்கரைச் சிற்பங்கள், கோடிக்கரை குழகர் கோயில், கலங்கரை விளக்கம், சதுப்பு நிலங்கள், இலங்கை பொலன்னறுவாவில் உள்ள புத்தரின் புராதனச் சிலைகள், திருக்கோயில்கள், சித்தன்னவாசல் ஓவியங்கள் முதலிய கலைச் செல்வங்கள்.

யாருடைய மனத்தையும் புண்படுத்தாமல் நகைச்சுவை உணர்வு இழையோடப் புதினம் புனைந்தவர் கல்கி.

சான்றாக,இலங்கையில் சிங்களவர்கள் நாள்தோறும் நீராடுவதில்லை. இந்தக் குறையை சுட்டிக் காட்ட விரும்பினார் கல்கி. எவ்வாறு ?

"இலங்கை நாடு பூராவும் குளங்கள் ஏராளமாக இருக்கின்றன; இவற்றைப் பார்க்கும்போது, பழங்காலத்தில், சிங்களவர்கள் நாள்தோறும் குளிக்கும் பழக்கம் உடையவர்கள் என்பது தெரிகிறது" என்று சாமர்த்தியமாக நகைசுவை உணர்வோடு சொன்னார்.

சிக்கல் நிறைந்த அரசியல் பிரச்சனைகள், நூல் மதிப்புரை, இசை விமர்சனம், அறிஞர்களுக்குப் பாராட்டுரை, பயணக்கட்டுரை, இலக்கிய விளக்கம் என்று பல துறைகளிலும் கல்கி எழுதியதன் மூலம் அவரின் பலதுறை பரந்துபட்ட அறிவைக் காணலாம்.

தமிழிசை வளர்ச்சியில் மிகவும் அக்கறை காட்டியவர் கல்கி. தமிழிசைப் பாடல்களை மேடையில் பாடுவதைக் கௌரவக் குறைவு என்று அப்போது நினைத்துப் பாடமாட்டார்கள்.

இத்தவறான போக்கைக் கண்டித்தவர் கல்கி. தமிழிசை பாடவேண்டும் என்று ஆதரித்துப் பத்திரிகைகளில் எழுதினார். மேடைகளில் பேசினார். ஆர்.கே. சண்முகம் செட்டியார். அண்ணாமலை செட்டியார் இவர்களுடன் இணைந்து தமிழிசை வளர்ச்சிக்குப் பாடுபட்டவர் கல்கி.

காரண காரிய தருக்க முறையோடு தமிழ் இசையின் சிறப்பை எடுத்து விளக்கினார். தமிழ் சாகித்தியங்களைத் தாமே இயற்றினார்.

"என்ன சொன்னாலும் தமிழிசை இயக்கத்தை எதிர்ப்பவர்களை என்னால் மாற்ற முடியவில்லை. என்னையும் அவர்களால் மாற்ற முடியவில்லை'' என்று தம் தமிழிசை உணர்வைச் சுட்டிக் காட்டுகிறார்.

தமிழ்ப் பற்றில் சிறந்தவர் கல்கி. தமிழ் வளர்ச்சிக் கழகத்துக்கு உற்ற துணைவராக விளங்கினார். சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் உருவாகக் கல்கியும் ஒரு காரணம்.

ராஜாஜியைக் கொண்டு வியாச பாரத விளக்கமும், ரசிகமணி டி.கே.சி.யைக் கொண்டு சித்திர ராமாயணமும் தம் பத்திரிகையில் எழுதச் செய்தார்.

**மனித நேயம் மிக்கவர் கல்கி**

"எங்களுக்குப் பொதுவாழ்வில் மதிப்புத் தந்து, எங்களை

நடிகர்கள், கலைஞர்கள் என்று நாட்டு மக்கள் அழைக்குமாறு செய்தவர் கல்கி” என்று அவ்வை டி.கே. சண்முகம் கல்கியின் இரங்கல் கூட்டத்தில் பேசினார்.

அக்காலத் திரையுலக முடிசூடா மன்னர் எம்.கே. தியாகராஜ பாகவதருக்குக் “கந்தர்வ கான ஏழிசை மன்னர்” என்னும் பட்டம் வழங்கிப் பெருமைப்படுத்தினார். கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் மீது மதிப்பு வைத்திருந்தவர் கல்கி. மதுவிலக்கு, சாதி ஒழிப்பு, மூட நம்பிக்கை ஒழிப்பு, பெண் உரிமை ஆகிய சமுதாய நன்மைகளுக்குக் கலைவாணர் பாடுபட்டதற்காக அவருடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார்.

பாரதியாரின் நண்பர் பரலி சு. நெல்லையப்பரின் தியாகத்தைப் பாராட்டி நிதி திரட்டி வழங்கினார். எழுத்தாளர் வரா. கொத்தமங்கலம் சுப்பு ஆகியவர்களைப் பற்றி எழுதிப் பெருமைப் படுத்தினார்.

கல்வி நிலையம், அனாதை விடுதி, ஆதரவற்ற பெண்கள் நிலையம் இவற்றுக்கு நிதி திரட்டி உதவினார். வளர்ந்து வரும் எழுத்தாளர்களுக்கு ஊக்கம் அளித்து ஆதரித்தார். அச்சுக் கோர்பவரையும் உற்சாகப்படுத்தி எழுத்தாளர் ஆக்கினார்.

மாற்றுக் கருத்து உடையவர்களையும் மதித்துப் போற்றியவர் கல்கி. அறிஞர் அண்ணாவின் “ஓர் இரவு” நாடகத்தை ரசித்துப் பாராட்டி ‘இதோ ஒரு தென்னாட்டுப் பெர்னார்ட்ஷா’ என்று புகழ்ந்தார்.

பராசக்தி, மனோகரா திரைப்படங்களைப் பார்த்து, ‘மென்மையான தமிழில் இப்படியெல்லாம் ஆவேசமாக எழுத முடியுமா!’ என்று கலைஞரை வியந்தார்.

தம் கருத்துக்களைத் தொடக்கம் முதலே கடுமையாக எதிர்த்த சிறுகதை மன்னன் புதுமைப்பித்தன் மறைந்த சமயம், மிகவும் மனம் நொந்தவர் கல்கி. புதுமைப் பித்தன் குடும்பத்தாருக்கு நிதி திரட்டி, சென்னை ராஜா அண்ணாமலை புரத்தில் இல்லம் வாங்கிக் கொடுத்தார். அந்த இல்லத்தையும், புதுமைப் பித்தன் நினைவு நூல்

நிலையத்தையும் தாமே திறந்து வைத்தார். புதுமைப் பித்தனின் மனைவி மக்களை வாழ்த்திப் பேசினார்.

அளவுகடந்த நாட்டுப்பற்றுக் கொண்டவர் கல்கி. நாடு விடுதலை பெறத் தம்மை அர்ப்பணித்தார். பலமுறை சிறை சென்றார்.

"தியாகபூமி" புதினம் மூலம் நாட்டுப் பற்று, நாட்டு விடுதலை, தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு ஆகியவற்றை வலியுறுத்தினார். பெண் அடிமை நீக்கம், பெண் உரிமை, பெண் கல்வி பற்றிப் பிரச்சாரம் செய்தார். காந்தியச் சிந்தனைகள் தமிழகத்தில் பரவ கல்கி பெரும் பங்காற்றினார். 'தியாக பூமி' புதினத் தாக்கத்தால், 'தியாக பூமி சீலை' அக்காலத் தாய்மார்கள் மத்தியில் பிரபலம் அடைந்தது.

தேசிய கவி சுப்பிரமணிய பாரதியாரிடம் அளவு கடந்த மரியாதையும், பக்தியும் கொண்டவர் கல்கி. எட்டயபுரத்தில் பாரதி நினைவு மணிமண்டபம் கட்டி அஞ்சலி செலுத்தினார். காந்தி மணி மண்டபம், திரு.வி.க. நினைவு மண்டபம் அமைத்து, மக்கள் அஞ்சலி செலுத்த வழி வகுத்தார்.

பூரியாத்திரை, இலங்கையில் ஒரு வாரம் நம் தந்தையர் செய்த விந்தைகள் ஆகிய தலைப்புக்களின் கல்கி எழுதிய பயணக் கட்டுரைகள் பலராலும் பாராட்டப்பெற்றவை.

தொடர்கதையை, ஐந்து ஆண்டுகள் தொடர்ச்சியாக வாரம் தோறும் எழுதி, மக்கள் அனைவரும் படித்து மகிழ்ந்தது தொடர்கதையில் கல்கி செய்த சாதனையாகும்.

சமகாலப் புதின உலகில் கல்கிக்குத் தனி இடம் உண்டு.

## தொடர்பு முகவரி

பதிப்பாசிரியர்,

**இரா. சதாசிவம்**

செந்தமிழ்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை – 625 001.
போன் : (0452)-2532879

## இல்ல முகவரி

**இரா. சதாசிவம்**
2/404, மருதுபாண்டியர் தெரு,
வட்டாட்சியர் நகர்,
மதுரை–20.

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம்,
2/404, மருதுபாண்டியர் தெரு, வட்டாட்சியர் நகர், மதுரை-20. ✆ 2532879.

ஆசை அச்சகம், மதுரை. ✆ 26 222 50, 98434 - 32484

பதிப்பாசிரியர்

பேராசிரியர். திரு. இரா. சதாசிவம்

## ஆசிரியர் குழு

முனைவர் திரு. தமிழண்ணல்

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

டாக்டர் திரு. ந. சேதுராமன்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. ம.ரா.போ. குருசாமி

முனைவர் திரு. அ.அ.மணவாளன்

முனைவர் கதிர் மகாதேவன்

முனைவர் நா. பாலுசாமி

முனைவர் பெ. சுயம்பு

முனைவர் திரு. அ. தட்சிணாமூர்த்தி

இராசா திரு. முருகதாஸ் தீர்த்தபதி

முனைவர் திரு. செ. கந்தசாமி

முனைவர் திரு. க. சின்னப்பா

அனுப்புநர்,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை- 625001.

From,
Secretary,
Madurai Tamilsangam,
Madurai - 625001.
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,